க.ஆ. 1112

நூறின் முகை

முத்திப் பஞ்சாக்கர மாலை

மா தவ சிவஞான யோகிகள் அருளிய

பஞ்சாக்கர தேசிகர் மாலை



மகரத்தலைநாள் குருபூசை மலர்

வெளியிட்டோர் :

கம்பன் இலக்கியப் பண்ணை

கம்பன் அகம், பிட்டாபுரம், நெல்லை–6.

1182–ம் ஆண்டு சுறவம் 11உ புரவி (25-01-2007)



திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்
23-வது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர்
சிவப்பிரகாச தேசிய பண்டாரசந்நிதி அவர்கள்

உ
திருச்சிற்றம்பலம்

கண்டு நலும் கண்டக்
கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள்
மலம் அகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்று ஒருகால்
மேவுவரால் வேறுஇன்மை
கைகண்டார் உள்ளத்தின்
கண் — அருள்நந்தி சிவம்

முத்திப் பஞ்சாக்கர மாலை

திருவே! என் செல்வச் சிறப்பே!
சிவானந்தத் தெள்அமுத
உருவே! உருவமும் ஊருடன்
பேரும் ஒன்றும் புணரா
அருவே! தெளிந்த அறிவே!
மெய்யன்பர்க்கு அருளும் தெய்வத
தருவே! தென்கோமுத்தி முத்தி
பஞ்சாக்கர சற்குருவே! 1

சுந்தர மால், அயன் வாழ்வும்

ஐந்தாரின் சுவர்க்கவைப்பும்
இந்திர ஞாலம், கனாஎனக்
கண்டுஉன் இணையடிக்கே
அந்தம்இல் காதலுற்று
ஆராத இன்பத்து அமர்ந்திருக்கத்
தந்தருள்! கோமுத்தி முத்தி
பஞ்சாக்கர சற்குருவே! 2

பண்டு அறியாமை பிடித்துவிட்
டேனை விடாதுபற்றிக்
கொண்டு, குணவழி விட்டுத்
திருத்தி, என்கோது அகற்றிப்
புண்டரிகப் பதம் தந்தாய்க்கு
என்னால் ஒருபோகம் உண்டோ?
தண்தமிழ்க் கோமுத்தி முத்தி
பஞ்சாக்கர சற்குருவே! 3

மாயா, புலம் கிழித்து, அருள்ஞானம்
விளங்கவைத்து, உன்
நேய ஆனந்தத்தில் அமிழ்த்திடு வாய்;
நித்த முத்த சுத்தத்

தூயா! சராசர பேதங்கள்

யாவையும் தோற்றுவிக்கும்
தாயான கோமுத்தி முத்தி
பஞ்சாக்கர சற்குருவே! 4

அரணங்கள் மூன்றும் எரித்தாய்
சரணம். அதிலும், அன்பர்
மரணம் படாதுஅருள் வைத்தாய்!
சரணம், வலிய அந்தக்
கரணங்களால் மெலிந்து எய்த்தேன்
சரணம், நின் பொற்கழலே
சரணம், தென்கோமுத்தி முத்தி
பஞ்சாக்கர சற்குருவே! 5

❖❖❖❖❖

குருமுதல்வர் நமச்சிவாய மூர்த்திகள் திருக்கோவில் காலை பூசை நிறைவில் கோயில் உள்ளே குருமகாசந்நிதானங்கள் 5 முறை நிலம் தோய உடல் படிந்து தொழும் வழிபாட்டில் இப்பாடல்கள் ஆதீன ஓதுவார்களால் ஓதப்படும்.

ஸ்ரீபஞ்சாக்கர தேசிகர் மாலை

அறிவே! அருட்செல்வமே!
நிறைவே! அரசே! அடியார்
உறவே! என் ஆருயிரே!
மணியே! உருகாத நெஞ்சிற்
பிறிவே! துரியங் கடந்த
சிவானந்தப் பேரமுதச்
செறிவே! கருணைப் பிழம்பே!
பஞ்சாக்கர தேசிகனே! 1

பொய்யும், சுவடும், கொடுமையும்,
வஞ்சமும் பூண்ட பொல்லாக்
கையான், கலதி, முழுமூட
னேனும்நின் கண்ணருளால்
உய்யும்படி என்று கூடும் எந்தாய்!
உண்மை யாளர் அன்பு
செய்யும் துறைசையுள் தேவே
பஞ்சாக்கார தேசிகனே! 2

பரிசு அறியேன் அருட்பண்பு அறியேன்
எனைப் பற்றும்வினைக்
கரிசு அறியேன், அது மாற்றறியேன்
கலரோடு இணங்கித்
துரிசுகளேசெயும் பொல்லா
உலகத் தொழும்பனுக்குஉன்
தெரிசனம் கிட்டுவது என்றோ
பஞ்சாக்கர தேசிகனே. 3
மருவேன் உனதடியார்த்
திருக்கூட்டம் மருவிவஞ்சம்
ஒருவேன், மகளிர் விழிக்கடை
நோக்குக்கு உளம்பதைத்து
வெருவேன், அடிமையும் எந்நாள்
உனதருள் மேவுவனோ?
திருஆ வடுதுறைத் தேவே!
பஞ்சாக்கர தேசிகனே! 4
ஆனந்த வாழ்வில் அடியார்
எல்லாரும் அகம்களிப்ப
நான் இந்த மாயத் தொடக்கினில்
வீழ்ந்து நலிதல் நன்றோ!

வான் அந்தம் நீண்ட மதில்
ஆவடுதுறை வாழ்முதலே!
தேன்உந்து பங்கயத் தாளாய்
பஞ்சாக்கர தேசிகனே! 5

வற்றாக் கருணைத் திருநோக்கும்
நின்முக மண்டலமும்,
சற்றே முகிழ்த்த குறுமூரலும்,
தட மார்பழகும்,
பொற்றாளும் சின்முத்திரையும்
நெஞ்சூடு பொறித்துவைப்பாய்
செற்றார் புரம்செற்ற தேவே!
பஞ்சாக்கர தேசிகனே! 6

தேறாத நெஞ்சும், தெளியாத
சிந்தையும் தேங்கி இன்பம்
ஊறாத கண்ணும் ஒழியாக்
கவலையும், உன்புகழே
கூறாத நாவும் எனகே
தகும் என்று கூட்டினையே!
சீறாது அருள்செய்யும் தேவே!
பஞ்சாக்கர தேசிகனே! 7

நின்னருள் நோக்கினுக்கு எவ்வள
வேனும் நெகிழ்ந்துருகாது
என்னுடை வன்மனம் மின்னார்
விழிக்கடைக்கு என்னில் அந்தோ!
வன்னியின் நேர்மெழு காய்உருகா
நிற்கும் மாயம்என்னே!
செந்நெறியாய் நின்ற தேவே!
பஞ்சாக்கர தேசிகனே! 8

பிறவித் துயர்இனி ஆற்றேன்
அடைக்கலம்; பேயுலகின்
மறுகித் திரிந்து அலைந்து எய்த்தேன்,
அடைக்கலம்; மங்கைநல்லார்
உறவைத் தவிரித்து உய்யக் கொள்வாய்!
அடைக்கலம்! உண்மை அன்பர்
செறிவுக்குள் வாழும் மெய்த்தேவே!
பஞ்சாக்கர தேசிகனே! 9

இருவினை தாம்இவை, மும்மலம்
ஈங்கிவை, ஈதுசிவம்,
கருவுறும் ஆருயில் உண்மை
இதுஎன்று காட்டவல்ல

குருபரன் நீயன்றி வேறு
அறியேன் இக்குவலயத்தில்
திருவெண்ணெய் மெய்கண்ட தேவே!
பஞ்சாக்கர தேசிகனே! 10

பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி

தேசிக நாதன் சிவஞான
தேவன் செங்கைத் தலம்முன்
வீசி நின்றாடிய அம்பல
வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக்கரவன்
பிறங்கருள் தாள் மலரைக்
கூசி நின்றேத்திய மாதவத்
தார்க்குஎன் குறையுளதே.

– கச்சியப்ப முனிவர்

குருமுதல்வர் நமச்சிவாய மூர்த்திகள் திருக்கோவில் இரவு பூசை நிறைவில் கோயில் முன்மண்டபத்தில் குருமகாசந்நிதானங்கள் 11 முறை நிலம் தோய உடல் படிந்து தொழும் வழிபாட்டில் இப்பாடல்கள் ஆதீன ஓதுவார்களால் ஓதப்படும்.

தொட்டிக்கலை மதுரகவி சுப்பிரமணிய முனிவர் அருளிய

திருமாளிகைத் தேவர்

தோத்திர பஞ்சகம்

கருணைபொழி திருமுகமுஞ் சற்குருபொற்
பதமலரே காணுங் கண்ணும்
திருமருவு தடமார்பும் அத்துவித
முணர்த்துசின்முத் திரைச்செங் கையும்
மருமலர்ச்சே வடியிணையும் மனத்தெழுதி
வைத்திறைஞ்சி வாழுந் தொண்டர்க்
கருள்புரிய வருதிருமா ளிகைத்தேவ
சிகாமணியே அன்பர்வாழ்வே. 1

மருள்பெருக்கு மனக்கயவர் வஞ்சனையைத்
துமித்துனையே வைப்பாய்ப் போற்றும்
தெருள்பெருக்கு மனத்தடியார் குறைதீர்க்கும்
குணக்குன்றே சிறந்த வோர்நாற்
பொருள்பெருக்குந் தெய்வீகப்பூம் பொன்னி
சூழ்துறைசைப் பொலிந்து மேவி புறஞ்
அருள்பெருக்கு மொருதிமா ளிகைத்தேவ
சிகாமணியே அன்பர் வாழ்வே. 2

ஈன்றுவள்ர்த் திருதாயு மிதம்புரிதந்
தையுமல்லா திளஞ்சி றார்க்குத்
தோன்றுதுணை யாயொருவ ருண்டோவங்
கதுபோலுன் றொழும்பா யுள்ளேம்
மான்றுமனந் தளர்ந்திடினீ யன்றியளித்
தருளவல்லார் மற்று முண்டோ
ஆன்றபுகழ் பெறுதிருமா ளிகைத்தேவ
சிகாமணியே அன்பர் வாழ்வே. 3

பெண்டிருமக் களுமுரிமை பெருக்குகிளை
ஞரும்பொருளும் பிறவும் நீத்துன்
தண்டளிர்ப்பொற் றிருவடியே சரணாகச்
சார்ந்திருக்குந் தமியேங் கட்கும்
உண்டொர்குறை யெனிலெவர்மாட் டுரைத்
கொள்வதுரைத் தருள்வாய் வானத் | தாற்றிக்
தண்டர்கணம் பணிதிருமா ளிகைத்தேவ
சிகாமணியே அன்பர் வாழ்வே. 4

பூவலர்கொண் டெந்தைபெம்மான் பொன்னடிப்பூ
சனையியற்றும் புதல்வற் காக
மாவலித்தோண் மறலிபட்ட பாட்டையுன்னிப்
பாராதுன் வழித்தொண் டானேன்

மேவுமொரு புகலிலர்போல் வருந்துவன்

னழகேவெண் டிரைநீர்ப் பொன்னி
ஆவடுதண் டுறைத்திருமா ளிகைத்தேவ
சிகாமணியே அன்பர் வாழ்வே. 5

ஓம்

தமிழ்க்கடல் சிவபூசை

ஐயா ராய. சொ. அவர்கள் அருளிய

சேக்கிழார் மலர் வணக்கம்

உலகெலாம்	உணர்ந்து	ஓதினை	போற்றி!
நிலவு	நீர்முடி	நேடினை	"
அலகில்	ஆடலில்	அளைந்தனை	"
மலர்சி	லம்படி	வணங்கினை	"
தொண்டர்சீர்	பரவும்	தூயோய்	"
தொண்டைநல்	நாடளி	சுடரே	"
குன்றத்	தூர்வரு	குரிசில்	"
குன்றாப்	புகழுடைக்	கோமான்	"
பாலாற்	றில்தவழ்	பாலா	"
நூலாறு	நீந்திய	நுண்ணியோய்	"
ஆரூர்ச்	சிறப்பெலாம்	அருளினை	"
தேரூர்	மகன்முறை	செப்பினை	"
சுந்தரன்	புகழ்விரி	தூவாய்	"
வந்த	பிறப்பை	வணங்குவாய்	"
அநபா	யன்அவை	அமைச்ச	"
மநுவாம்	வழிமுதல்	வழுத்தினை	"
தொண்டத்	தொகைவிரி	தூமணி	"
அண்டர்நா	யகன்அருள்	ஆண்டனை	"

அறுபான மூவர்சீர் அளித்தனை "

இறைமணம் கமழ், பா இயற்றினை "
திருநீல கண்டனைத் தெளிந்தவ "
வரும்இயற் பகை கதை வகுத்தனை "
இளையான் குடிநலம் ஏத்தினை "
கோவல்மெய்ப் பொருட்குணம் கூறினை "
மலைவிறல் மிண்டர்சீர் மடுத்தனை "
அமர்நீதி துலைபுகல் அறைகுவாய் "
கருவூர்ப் பத்தன் கதைசொல்வாய் "
ஏனாதி புராணம் இயம்பினை "
கண்ணப் பன்புகழ்க் காதலாய் "
கலையனார் காதை காட்டினாய் "
மானக்கஞ் சாறர்சீர் வடித்தனை "
அறிவாட் டாயர்சீர் ஆய்ந்தனை "
ஆனா யர்குழல் அருந்தினை "
மூர்த்தியார் மொய்புகழ் மூழ்கினை "
முருகர் புகலூர் மொழிந்தனை "
உருத்திர பசுபதி உவப்பாய் "
நந்தனார் தந்திறம் நயப்பாய் "
குறிப்புத் தொண்டர்சீர் கூறுவாய் "
சண்டே சுரர்இசை சாற்றுவாய் "
நாவுக் கரையன்,பா நயந்தனை "
குலச்சிறை அமைச்சர்சீர் கூறினாய் "

மிழலைக்	குறும்பரை	விளக்கினை	
காரைக்கால்	அம்மையைக்	காட்டினை	"
அப்பூதி	கதைஅமுது	ஆர்ந்தனை	"
நீலநக்	கர்கதை	நேர்ந்தனை	"
நமிநந்தி	காதை	நல்கினை	"
ஞானசம்	பந்தனை	நாடுவாய்	"
ஏயர்கோன்	புகழ்க்கதை	ஈந்தனை	"
மந்திர	மூலர்சீர்	மாந்தினை	"
தண்டி	யடிநலம்	விண்டனை	"
மூர்க்கர்	பெரும்புகழ்	முழக்கினை	"
சோமாசி	மாறர்சீர்	சொற்றனை	"
சாக்கியர்	கல்லெறி	சாற்றினை	"
சிறப்புலி	சீர்த்தி	நிரப்பினை	"
சிறுத்தொண்	டர்புகழ்	விரித்தவ	"
கழறிற்று	அறிவார்	கதைநனி	"
கணநா	தன்புகழ்	கழறினை	"
கூற்றுவர்	புராணம்	கொடுத்தனை	"
புகழ்ச்சோ	ழர்புகழ்	போற்றினை	"
நரசிங்க	முனையரை	நாடினை	"
அதிபத்தர்	காதை	அறைந்தனை	"
கலிக்கம்பர்	காதை	கருதினை	"
கலிய	நாயனார்	கதைசொனாய்	"
சத்தியைப்	பாடிய	மெய்த்தவ	"

காடவர்	கோன்கவி	கருதுவார்	"
கண்ம்புல்	லர்கதை	காட்டுவாய்	"
காரி	நாயனார்	கதைசெய்தாய்	"
நின்றசீர்	மாறனை	நிறுத்தினை	"
வாயிலார்	மயிலையை	வாழ்த்தினை	"
முனையடு	வார்திறம்	மொழிந்தாய்	"
கழற்சிங்	கர்செயல்	கண்டவ	"
இடங்கழி	பெருமை	இசைத்தனை	"
செருத்துணை	சீர்க்கதை	செய்தாய்	"
புகழ்த்துணை	பாதம்	பொருந்தினை	"
கோட்புலி	அருஞ்செயல்	கொண்டனை	"
பூசலார்	உள்ளம்	புகுந்தாய்	"
மங்கையர்க்கு	அரசியை	வணங்கினாய்	"
நேசர்கோ	வணக்கொடை	நிகழ்த்தினாய்	"
செங்கட்	சோழர்சீர்	தேர்ந்தனை	"
யாழ்ப்பா	ணன்இசை	வாழ்த்துவாய்	"
சடையனார்	இசைசொல்	சான்றோய்	"
இசைஞானி	அன்னைசீர்	ஏற்றனை	"
நாவலூர்	மன்அடி	மேவுவாய்	"
பாவலர்	மணிமுடிப்	பாவல	"
சைவம்	தழைக்கநில்	தவமே	"
தெய்வச்	செழுந்தமிழ்	செய்தனை	"
பத்திக்	கடல்குடி	பண்ணவ	"

சித்தம் சிவனுக்கு ஈந்தனை
திலக வதிஅருள் செப்புவாய் "
உலகியல் கடந்த ஒருவ "
சாதிச் சிறுநெறி தாண்டினை "
போதத்து உச்சிசேர் புலவ "
பரவை,சங் கிலிபுகழ் பாடுவாய் "
அரனடி அன்றி அறியாய் "
மூவர் தமிழ்க்கடல் மூழ்குவாய் "
தேவரும் நுகர்தமிழ் செய்தவ "
ஞானப் பிள்ளையை நண்ணினை "
ஞானக் கவிபொழி நாவல "
நாவரை யன்திறம் நாட்டினை "
நாவரை யன்எனும் நல்தவ "
திருவா ரூர்ப்புகழ் தேர்ந்தவ "
கருவா ராநெறி கண்டனை "
என்றும் இன்பம் பெருக்குவாய் "
மன்றுளா டும்அடி ஒன்றினாய் "
பவப்பிணி அறுக்கும்நின் பாத்திறம் "
சிவநெறி உலகெலாம் சேர்த்தனை "
தூக்கிய திருவடி துலங்குவாய் "
சேக்கிழார் திருவடி போற்றி! "



திருவாரும் துறசையமர் திகழ்குருவாய் பொலிந்தருளி
மருவுகின்ற மாந்தர்எலாம் மனங்களிக்க புரந்தருளி
குருமுதல்வர் குலமரபு குவலயத்து தழைத்திடசெய்
அருட்சிவப்பி ரகாசதேசி கர்மலர்தாள் போற்றினனே

அடியவன் – ஸ்ரீபாதசேகரன்

உதவினோர் A.S. முத்தையா, Tel, நெல்லை-6.
M. பரமசிவன், பெரியதெரு, நெல்லை–6.